செ.வெ.எண்.41 நாள்: 30.12.2019

தூத்துக்குடி மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக ஊரக உள்ளாட்சி தேர்தல் நடைபெறும் கயத்தாறு, கோவில்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட பல்வேறு வாக்குசாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

---

தூத்துக்குடி மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக ஊரக உள்ளாட்சி தேர்தல் நடைபெறும் கோவில்பட்டி, கயத்தாறு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட பல்வேறு வாக்குசாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று இன்று (30.12.2019) ஆய்வு செய்தார்.

கோவில்பட்டி ஒன்றியம் பாண்டவர்மங்களம் ஊராட்சி, நாடார் மேல்நிலைப்பள்ளி வாக்குச்சாவடி மையத்தினை பார்வையிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் மாநில தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி இரண்டாம் கட்டமாக 5 ஊராட்சி ஒன்றியங்களில் காலை 7 மணிமுதல் வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது. இன்று சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, நெடுங்குளம் ஊராட்சி வேலன்புதுக்குளம் வாக்குச்சாவடியில் மறுவாக்குபதிவு மற்றும் 994 வாக்குசாவடி மையங்களில் இரண்டாம் கட்டம் ஊரக உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது. காலை 9 மணி நேர நிலவரப்படி 8.15 சதவீதம் வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது. சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வாக்குச்சாவடியில் நடைபெறும் மறுவாக்குப்பதிவில் 24.34 சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளது. இன்று இரண்டாம் கட்டமாக நடைபெற்று வரும் ஊரக உள்ளாட்சி தேர்தலில் 180 பதற்றமான வாக்குசாவடி மையங்களில் வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது. 82 பதற்றமான வாக்குசாவடி மையங்களில் நுண் பார்வையாளர்கள் மூலம் கண்காணிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், மாநில தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி பதற்றமான வாக்குசாவடி மையங்களில் வெப் கேமரா அல்லது வீடியோ கவரேஜ் மூலம் கண்காணிக்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது. இரண்டாம் கட்டமாக நடைபெறும் தேர்தலில் சுமார் 2300 காவல்துறையினர் பல்வேறு பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். மேலும் காவல் துறை துணை கண்காணிப்பாளர்கள் தலைமையில் பதற்றமான வாக்குசாவடி மையங்களில் கூடுதலாக காவல் துறை மூலம் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. வருவாய் துறை அலுவலர்கள், ஊரக உள்ளாட்சி துறை அலுவலர்கள் பதற்றமான வாக்குசாவடி மையங்களில் தொடர்ந்து ரோந்து பணியில் பார்வையிட்டு வருகிறார்கள். வாக்குப்பதிவு நிறைவடைந்த பின்பு மண்டல அலுவலர்கள் மூலம் வாக்குப்பெட்டி மற்றும் இதர பொருட்கள் வாக்கு எண்ணிக்கை மையங்களுக்கு பாதுகாப்பாக எடுத்துச் சென்று காப்பறையில் (ஸ்ட்ராங் ரூம்) வைக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாநில தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி வாக்கு எண்ணும் மையத்தில் வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள அறைகளை கண்காணிக்க வெப் கேமரா, சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளது.

சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, நெடுங்குளம் ஊராட்சி, வேலன்புதுக்குளம் வாக்குச்சாவடியில் நடைபெற்ற வாக்குபதிவின் தேர்தல் விதிமுறைகளை மீறிய 5 நபர்கள்மீது புகார்கள் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 2 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதில் ஒரு நபர்மீது குன்டாஷ் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. மேலும் 3 நபர்களை காவல் துறையினர் தேடி வருகின்றனர். மேலும், வாக்குப்பதிவு தலைமை அலுவலர் மற்றும் தலைமை பெண் காவலர் ஆகியோர்களை பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், பிற வாக்குப்பதிவு அலுவலர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. மேலும், சட்டம், ஒழுங்கு பிரச்சனைகள் ஏதுமின்றி வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வின்போது கோவில்பட்டி கோட்டாட்சியர் திருமதி.விஜயா, கோவில்பட்டி வட்டாட்சியர் திரு.ரகுபதி மற்றும் மண்டல அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.